செய்கிறேன்'' என்று சொல்லுங்கள். எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. நீங்கள் எப்படி அனுமதி மறுத்தீர்கள் என்று என்னைக் கேட்கக்கூடாது.

திரு. பி.ஆர். சுந்தரம்: Request-தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானும் Request-ஆகத்தான் சொல்கிறேன், அனுமதி மறுத்துவிட்டேன் என்று. நான் ரொம்ப சாந்தமாகச் சொல்கிறேன். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: விவசாயிகள்மீது போலீஸார் தடியடி நடத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய நியாயமான கோரிக்கையைத்தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த விவசாயிகள்மீது நடவடிக்கை எடுத்து அடித்த அந்த போலீஸ்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த விவசாயிகள் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(ஆ) பேரவை புறவாரத்தில் உளவுத் துறையினர் அமர்தல்

திரு. சி. ஞானசேகரன்: Point of Order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய இறையாண்மை குறித்த ஒரு பிரச்சினையை நான் கிளப்ப விரும்புகிறேன். இங்கே அவை கூடிய பிறகு, சட்டமன்ற உறுப்பினர்கள் லாபியிலே இருக்கக்கூடிய இடத்தில் காவல் துறையைச் சார்ந்த உளவுத் துறை நபர்கள் எல்லாம் அமர்ந்து கொண்டு, நடமாடிக் கொண்டிருப்பது என்பது சரியல்ல. இது இந்த அவையினுடைய உறுப்பினர்களுடைய உரிமையைப் பொறுத்த விஷயம். ஆகவே, தங்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட இந்த அவையினுடைய வளாகத்திற்குள்ளே உளவுத் துறையைச் சார்ந்தவர்கள், அவை கூடிய பிறகு, அவை முடிகிற வரையில் யாரும் அங்கே லாபி இருக்கையிலே அமர்ந்து பேசக்கூடாத ஒரு நிலையைத் தாங்கள் உருவாக்கித் தரவேண்டும் என்கிற பணிவன்பான வேண்டுகோளைத் தங்கள் முன்னாலே பதிய வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் நான் நடவடிக்கை எடுப்பேன். முதலமைச்சருடைய பாதுகாப்புத் துறை அதிகாரிகள் பக்கத்திலே உட்காருவதில் ஒன்றும் தவறில்லை. அவர்கள் ஒன்றும் உளவுக்காக வரவில்லை. முதலமைச்சரின்

பாதுகாப்புக்காக, ஒன்றிரண்டு அதிகாரிகள் வருவார்கள். அவர்கள் இருக்க இடமில்லையென்று சொன்னால் உட்காருவார்கள். அங்கு உட்காரக்கூடாது என்றால்கூட நான் வேறு இடம் கொடுக்கிறேன். இதிலே வேறு ஒன்றும் உளவு பிரச்சினை கிடையாது.

திரு. இரா. தாமரைக்கனி: இல்லை, லாபியிலே உட்கார்ந்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லாபியிலே இருந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) லாபியிலே இருந்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். உட்காருங்கள்.

4. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, பொதுக் கணக்குக் குழுவினுடைய அறிக்கைகளை அளித்தல். திரு. வி.கே. லட்சுமணன்.

திரு. வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999-2000 ஆண்டிற்கான 223 முதல் 227 வரையிலான பொதுக் கணக்குக் குழுவின் ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

முற்பகல் 10-55

5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2000

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2000 ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2000). மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,